பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

தொடக்கம் 27

1 இஸ்லாம் உள்ளங்களை இணைக்கும் 29

2 கருத்துவேறுபாடுகளை இஸ்லாம் அகற்றும் 34

3 எல்லாச் சண்டைகளும் இஸ்லாமால் முடிவுக்கு வரும் 37

4 மார்க்கத்தால் மட்டுமே இணக்கம் ஏற்படுத்த முடியும் 42

5 மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி வைப்பதால் மகத்தான நற்கூலி 52

6 மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துபவருக்கு ஸகாத்தில் ஒரு பங்கு உண்டு 55

7 முஸ்லிம்களுக்கு இடையே சரியான முறையில் இணக்கம் ஏற்படுத்த நபி ﷺ அவர்களின் கட்டளை 57

1

இஸ்லாம் உள்ளங்களை இணைக்கும்

*

நபியவர்கள் அனுப்பப்பட்ட இஸ்லாமிய மார்க்கம் பிரிந்து கிடந்தவர்களை ஒன்றிணைத்து இறைவிசுவாசிகளாக்கியது. மனிதர்கள் அறியாமைக் காலத்தில் பிரிந்து கிடந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் விரோதிகளாக இருந்தார்கள். ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவர்களே தங்களுக்குள் பகைமையோடு இருந்தார்கள். அவ்வாறெனில் இருவேறு கூட்டத்தார்களின் பிரிவினையைச் சொல்லத் தேவையில்லை. முற்றுப்பெறாத, நிரந்தரமான பல போர்களும் சண்டைகளும் நடந்தேறின.

அறபியர்கள் மற்றவர்களைச் சீர்குலைப்பவர்களாகவும் பிளவு ஏற்படுத்துபவர்களாகவும் கோபமூட்டுபவர்களாகவும் இருந்தார்கள். கோத்திரத்தைக் காரணமாக வைத்தே அவர்களிடையே நெருக்கம் ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு கூட்டத்தினரும் மற்றவர்களிடம் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு சண்டை சச்சரவின் போது வலுவுள்ளோர் பலவீனர்களை மிகைத்துவிடுவார்கள். அநியாயக்காரர்கள் பாதிப்புக்குள்ளானோரை தூக்கி வீசிவிடுவார்கள். இப்படித்தான் அறபியர்களின் நிலைமை இருந்தது. மட்டுமன்றி அனைத்து சமூதாயத்தினரின் நிலைமையும் நபியவர்கள் தூதராக அனுப்பப்படும் முன்பு கவலைக்கிடமான நிலைமையிலே இருந்தது.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் நேர்வழியும் சத்திய மார்க்கமும் கொடுத்து அனுப்பப்பட்டார்கள். நபியவர்கள் மக்களை இறைமார்க்கத்திற்கும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். அப்போது அல்லாஹ் எவர்களுக்கு நேர்வழி காண்பிக்க நாடினானோ அத்தகையவர்கள் இறைவிசுவாசம் கொண்டபோது அனைவருடைய வாக்கும் ஒன்றாகி, அவர்களது ஆட்சி நிலைபெற்றது. அவர்களிடையே இருந்த விரோதம் முற்றுப்பெற்று, அவர்கள்

2

கருத்துவேறுபாடுகளை இஸ்லாம் அகற்றும்

⁂

முற்காலத்தில் உள்ளங்களை ஒன்றிணைத்த இந்த மார்க்கமே அல்லாஹ்வின் நாட்டப்படி தற்காலத்திலும் இனி மறுமைநாள் உண்டாகிற வரையிலும் உள்ளங்களில் பிணைப்பு ஏற்படுத்த முடியும். இதையே இமாம் மாலிக் இப்னு அனஸ்[2] ﵀ அவர்கள், 'இந்தச் சமுதாயத்தின் முன்னோர்களைச் சீர்திருத்திய இஸ்லாமிய மார்க்கமே இந்தச் சமுதாயத்தின் பின்வருபவர்களையும் சீர்திருத்தும்' என்று கூறுகிறார்கள்.

சரியான மார்க்கமும் அல்லாஹ்வைப் பற்றிய தவறில்லாத, குற்றங் குறை இல்லாத நம்பிக்கையும் அவனுடைய தூதரைப் பின்பற்றி நடத்தலும்தான் இந்த சமுதாயத்தின் பின்னோர்களின் சீர்திருத் தத்திற்குக் காரணமாக அமையும். ஆகவே, இறைவேதத்தையும் நபி வழியையும் அடிப்படையாகக்கொண்ட இந்த மார்க்கத்தின் மூலம் தான், பிரிந்து கிடக்கின்ற, கருத்து முரண்பட்டுள்ள பிரிவினர்களி டையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். ஒற்றுமைக்கு இம்மார்க் கமே முன்னுதாரணமாக அமைய முடியும். அல்லாஹ் தன் குர்ஆனில்

فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللَّهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ذَلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا

---

2 இமாம் மாலிக் இப்னு அனஸ் இப்னு மாலிக் இப்னு அபூஆமிர் ﵀, ஹிஜ்ரீ 94 (கி.பி. 717)இல் மதீனாவில் பிறந்தார்கள். முப்பாட்டனார் அபூஆமிர் ﵁ மூத்த நபித்தோழர். இமாமவர்கள் மதீனா அறிஞர்களான இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄ அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமை நாஃபிஃ ﵀ ஆகியோரிடம் ஹதீஸ்களைக் கற்றார்கள். இவர்கள் தொகுத்த 'முவத்தா' எனும் ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரசித்தி பெற்றது. இமாம் ஷாஃபிஈ ﵀ இவர்களின் மாணவர். ஹிஜ்ரீ 179 ரபீஉல் அவ்வல் 14இல் தம் 85ஆம் வயதில் மதீனாவில் மரணித்தார்கள்.

3

எல்லாச் சண்டைகளும் இஸ்லாமால் முடிவுக்கு வரும்

*

முன்னோர்கள் மத்தியில் அவர்களின் கோத்திரப் பிரச்சினையின் போதும், ஊர்க் கருத்துவேறுபாடுகள், நிற வேறுபாடுகள் ஆகிய வற்றின்போதும் இந்த மார்க்கம் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி யிருக்க, அல்லாஹ்வின் நாட்டப்படி இக்காலத்தவர்கள் மத்தியிலும் இனி இறுதித்தீர்ப்பு நாள் வரையிலும் ஒருமைப்பாட்டை இந்த மார்க்கத்தால் உருவாக்க முடியும்.

இதற்கு நாம் வாழ்கின்ற காலத்தின் உதாரணத்தைக் கூறுகின்றேன்: நஜ்து தேசத்தில் சில ஊர்கள் இருந்தன. அந்த ஊரில் பிரிவினையும் கருத்து முரண்களும் நிறைந்து காணப்பட்டன. இன்னொரு ஊரின் தலைவரோடு சண்டையிடுகிற தலைவர் ஒவ்வோர் ஊரிலும் இருப்பார். அந்த ஊர்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் நிலை பெற்று, அபகரிப்பும் வழிப்பறிக் கொள்ளையும் அரங்கேறி வந்தன. அருகருகே இருந்த ஊர்களுக்கு இடையே எந்த நல்லுறவும் இல்லாமல் போய்விட்டது.

ஒரே ஊரில் ஒரு கூட்டத்தாரின் வாரிசுகளுக்கு இடையேயே போர்களும் பகைமையும் நிலைபெற்றுவிட்டன. ஒரு கோத்திரத்தின் வாரிசுகளே தங்களுக்குள் சண்டையிட ஆரம்பித்துவிட்டனர். அந்த ஊர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காண்பிக்க நாடியபோது குர்ஆனின்படியும் நபிவழியின்படி பயிற்சியளிக்கின்ற ஒரு மார்க்க அறிஞரை வழங்கி அல்லாஹ் அந்த ஊர்களுக்கு நல்லுதவி செய்தான்.

அந்த மார்க்க அறிஞர் முன்னோர்களான நல்லோர்களின் பாதை யை விளங்கி வைத்திருந்தார். அந்த மக்களிடம் காணப்பட்ட குழப்பமான கொள்கைகளையும் பிரிவினைகளையும் கருத்து முரண்களையும் கண்டார். அந்த மார்க்க அறிஞர்தான் அல்இமாம்

5

மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி வைப்பதால் மகத்தான நற்கூலி

*

மனிதர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதால் அல்லாஹ் விடம் மகத்தான நற்கூலி உள்ளது. அல்லாஹ் குர்ஆனில்

لَا خَيْرَ فِي كَثِيرٍ مِنْ نَجْوَاهُمْ إِلَّا مَنْ أَمَرَ بِصَدَقَةٍ أَوْ مَعْرُوفٍ أَوْ إِصْلَاحٍ بَيْنَ النَّاسِ وَمَنْ يَفْعَلْ ذَلِكَ ابْتِغَاءَ مَرْضَاتِ اللَّهِ فَسَوْفَ نُؤْتِيهِ أَجْرًا عَظِيمًا

'நபியே! அவர்களுடைய இரகசியப் பேச்சுகளில் பெரும் பாலானவற்றில் எந்த நன்மையும் இல்லை. எனினும், தர்மத்தைக் கொண்டும் நன்மையைக் கொண்டும் மனிதர்களிடையே சமா தானத்தை ஏற்படுத்துவது கொண்டும் ஏவுகின்றவரைத் தவிர. (இவ்விசயங்களில் இரகசியமாகப் பேசுவது நன்மை தரும்.) அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைத் தேடி இதை எவர் செய் கிறாரோ அவருக்கு மகத்தான நற்கூலியை விரைவில் நாம் வழங்குவோம்' (4:114) என்று கூறுகிறான்.

ஒற்றுமை ஏற்படுத்துபவருக்கு மகத்தான நற்கூலி கொடுப்பதாக அல்லாஹ் வாக்கு கொடுத்துள்ளான். 'மகத்தான நற்கூலி' என்பதற்கு அல்லாஹ் கூறியுள்ள 'அஜ்ரன் அளீமா' என்பதில் உள்ள 'அளீமா' என்ற பதத்திற்கு 'மகத்தான' என்பது பொருள். அதாவது, அந்தக் கூலியின் அளவை வரையறுத்துக் கூற முடியாது. ஏனெனில், அல்லாஹ்வே அதை வரையறுத்துக் கூறாது, மகத்தான நற்கூலி என வருணிக்கிறான். எனவே ஒற்றுமை ஏற்படுத்துபவர்களுக்கு அல்லாஹ் மகத்தான நற்கூலியை வழங்குவான். இது பெரும் சிறப்பாகும்.

ஒற்றுமையை உண்டுபண்ண பொய்சொல்வதும் ஆகுமானதே. பொய் பேசுவது பெரும்பாவங்களில் ஒன்றாகும். பொய் பேசுவது மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டதாகும். அல்லாஹ் குர்ஆனில்

7

முஸ்லிம்களுக்கு இடையே சரியான முறையில் இணக்கம் ஏற்படுத்த நபி ﷺ அவர்களின் கட்டளை

⁂

இணக்கம் ஏற்படுத்த ஆர்வமூட்டி அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறிய ஒரு பொன்மொழி:

الصُّلْحُ جَائِزٌ بَيْنَ الْمُسْلِمِينَ إِلَّا صُلْحًا أَحَلَّ حَرَامًا أَوْ حَرَّمَ حَلَالًا

'முஸ்லிம்களுக்கு மத்தியில் இணக்கம் ஏற்படுத்துவது ஆகுமானதாகும். மார்க்கம் தடைசெய்திருப்பதை ஆகுமாக்குகின்ற, மார்க்கம் அனுமதித்துள்ளதை தடை செய்கின்ற இணக்கத்தை தவிர. (அறிவிப்பு: அபூ ஹுரைரா ؓ, ஸஹீஹு இப்னு ஹிப்பான் 5091, ஸஹீஹ் ஜாமிஃ 3862)

(அதாவது, மார்க்கம் ஹறாமாக்கியுள்ளதை ஹலாலாக்கி இணக்கம் ஏற்படுத்துதலும், மார்க்கம் ஹலாலாக்கியுள்ளதை ஹறாமாக்கி இணக்கம் ஏற்படுத்துதலும் கூடாது.) ஆகவே, மார்க்கம் தடை விதித்த விசயத்தில் இணக்கம் ஏற்படுத்துதலைத் தவிர வேறு எதனையும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் விதிவிலக்காக்கி வைக்கவில்லை. மேலும், நபியவர்கள் கூறும்போது,

وَالْمُسْلِمُونَ عَلَى شُرُوطِهِمْ إِلَّا شَرْطًا حَرَّمَ حَلَالًا أَوْ أَحَلَّ حَرَامًا

'முஸ்லிம்கள் தங்களது நிபந்தனைகளின்படி நடந்துகொள்ளலாம். எனினும் ஹறாமை ஹலாலாக்குகிற, ஹலாலை ஹறாமாக்குகிற நிபந்தனையைத் தவிர' என்றும் கூறினார்கள். (அம்ர் இப்னுல் அவ்ஃப் அல்முஸனீ ؓ, திர்மிதீ 1352, இர்வாஉ 1303)

ஆக ஒற்றுமை ஏற்படுத்துவது ஆகுமானதே. ஆயினும் அந்த ஒற்றுமையை ஏற்படுத்துவது ஹறாமான காரியத்திற்கோ அல்லது ஒரு ஹறாமை ஆகுமாக்கிக் கொள்ளவோ வழிவகுத்தால் அது